செய்தி வெளியீடு எண்: 306 நாள் : 24.06.2016

# செய்தி வெளியீடு

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இன்று (24.6.2016) திருவல்லிக்கேணியில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையம், இராயப்பேட்டையில் உள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையம் மற்றும் அப்பள்ளி வளாகத்திற்குள் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையம் ஆகியவற்றை மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களால் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பள்ளிகளில், அட்டவணைப்படி இன்று சாதம், காய்கறிகளுடன் சாம்பார், வறுத்த உருளைக்கிழங்கு மற்றும் வேக வைத்த முட்டை சமைக்கப்பட்டு குழந்தைகளுக்கு பரிமாறுவதற்காக தயார் நிலையில் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சமைத்த உணவினை ருசித்து பார்த்து அதிலுள்ள நிறை குறைகளை அங்குள்ள சத்துணவு பணியாளர்களிடம் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு பரிமாறுவதற்காக சமைத்து தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கலவை சாதம் மற்றும் காலையில் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட சத்து மாவு கஞ்சி மற்றும் உருண்டைகளையும் ருசித்து பார்த்தார்.

சமையலை துவங்கும் முன்பும் குழந்தைகளுக்கு உணவினை பரிமாறுவதற்கு முன்பும் சோப்பால் கை மற்றும் கால்களை சுத்தம் செய்ய வேண்டும் எனவும், சமையலுக்கு பயன்படுத்தும் பாத்திரங்களையும் நன்றாக கழுவிய பின்னரே சமைக்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சத்துணவுப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் பள்ளி ஆசிரியர்களையும் அழைத்து திட்ட செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்ததோடு, ஒவ்வொரு குழந்தைகளது ஆரோக்கியத்தினை கண்காணிப்பதற்காக பராமரிக்கப்பட்டு வரும் சுகாதார அட்டைகளையும் பார்வையிட்டு முறையாக பராமரிக்க தகுந்த அறிவுரைகள் வழங்கினார். பின்னர் குழந்தைகளுக்கு உணவு பரிமாறப்பட்டதையும் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளிடம் உணவின் ருசி மற்றும் தரம் பற்றியும் கேட்டறிந்தார்.

அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களை அதிகாரிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட அறிவுரை வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**